DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
SESSIONS CASE No. 514/2019
Prosecution Witness PW 1
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திருமதி.விஜயா | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் **- 18.09.2024.**

எதிரி ஆஜர்.

முதல்விசாரணை-

நான் தற்போது விருதுநகர் மாவட்டம், ரோசல்பட்டி கிராமத்தில்குடியிருந்து வருகிறேன். விருதுநகர் மாவட்ட கலெக்டர் அவர்கள் வீட்டில் care taker ஆக பணியாற்றி வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன கோவிந்தராஜ் என் கணவர் ஆவார். எனக்கும், எனது கணவர் கோவிந்தராஜுக்கும் கடந்த 2003 ஆம் ஆண்டில் திருமணம் நடந்தது. எங்களுக்கு ஹரி மாலினி என்ற ஒரு பெண் குழந்தை உள்ளது. நாங்கள் திருமணம் முடிந்து மதுரையில் வசித்து வந்தோம். திருமணம் முடிந்ததும் எனது கணவர் என்னை குடித்துவிட்டு அடித்து பிரச்சனை செய்து வந்ததால், நான் எனது தாயார் வீடு உள்ள விருதுநகருக்கு சென்றிருந்தேன். எனது கணவர் இறந்துபோவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பாக குடித்துவிட்டு என்னுடன் மீண்டும் பிரச்சனை செய்ததால், நான் என் தாய் வீட்டிற்குச் சென்றுவிட்டேன். கடந்த 08.04.2019 அன்று

மதியம் சுமார் 02.00 மணியளவில் எனது கணவரின் அலைபேசியிலிருந்து எனக்கு போன் வந்தது. போனில் பேசியவர் எனது கணவர் கோவிந்தராஜ் மாட்டுத்தாவணியில் இறந்துகிடப்பதாக தகவல் தெரிவித்தார். எனது கணவர் மாட்டுத்தாவணியில் இருசக்கர வாகன பழுது பார்க்கும் கடை வைத்திருந்தார். தகவல் கிடைத்ததும் என் கொழுந்தன் கோதண்டபாணியுடன் மாட்டுத்தாவணியில் இருசக்கர வாகனம் நிறுத்தும் இடத்திற்கு அருகில் போய் பார்த்தோம். அங்கு என் கணவர் இறந்து கிடந்தார். நான் இதுகுறித்து போலீசாரிடம் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார்தான் நான் கொடுத்தது. அது அ.சா.ஆ. **1** ஆகும். போலீசாரிடம் என் கணவரின் பிரேதத்தை அடையாளம் காட்டினேன். குடிப்பழக்கத்தால் என் கணவர் இறந்துவிட்டதாக புகாரில் கூறியுள்ளேன். இது குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என வழக்கறிஞர் தெரிவித்தார்.

ஒப்பம் - விஜயா.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,
முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
SESSIONS CASE No. 514/2019
Prosecution Witness PW 2
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. செல்வம் | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் **- 18.09.2024.**

எதிரி ஆஜர்**.**

முதல்விசாரணை**-**

நான் தற்போது மதுரை, மாட்டுத்தாவணியில் இருசக்கர வாகன நிறுத்துமிடத்தில் டிபன் கடை வைத்து நடத்தி வருகிறேன். இவ்வழக்கில் கோவிந்தராஜை எனக்குத் தெரியும். ஆஜர் எதிரியைத் தெரியாது. கடந்த 4, 5 ஆண்டுகளுக்கு முன்பாக கோவிந்தராஜ் என்பவர் மதுரை, மாட்டுத்தாவணியில் இருசக்கர வாகன நிறுத்துமிடத்திற்கு முன்பாக சண்டைபோட்டு இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன். நான் மறுநாள் காலையில் போய் பார்த்தேன். இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். இவ்வழக்கில் இறந்துபோன கோவிந்தராஜ் யாரிடம் சண்டைபோட்டார் என்று எனக்குத் தெரியாது என்று நான் போலீசார் விசாரணையில் கூறினேன். போலீசார் என்னிடம் விசாரித்தபோது இவ்வழக்கு சம்பந்தமாக எதுவும் தெரியாதென கூறினேன். ....

(அரசுத் தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க அனுமதி கோரியதன்பேரில், சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்படுகிறார்.)

அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை-

நான் போலீசார் விசாரணையில் மதுரை, மாட்டுத்தாவணி பஸ் ஸ்டாண்ட் அருகில் தள்ளுவண்டியில் பாஸ்ட்புட் கடை வைத்து நடத்தி வந்ததாகவும், எனதுகடைக்கு அருகில் இவ்வழக்கில் இறந்துபோன கோவிந்தராஜ் இருசக்கர வாகன பழுதுபார்க்கும்கடைவைத்து நடத்தி வந்தாரென்றும், ஆஜர்எதிரி RP Travels ல் புரோக்கராக பணிபுரிந்து வந்தாரென்றும், 07.04.2019 அன்று இரவு சுமார் 11.00 மணியளவில் நானும், எனது கடையில் மாஸ்டராக பணிபுரியும் சேக் அப்துல்லா என்பவரும் கடையில் இருந்தபோது ஆஜர்எதிரி இவ்வழக்கில் இறந்துபோன கோவிந்தராஜுடன் ஸ்டாண்டுக்கு வருகிற வண்டிகளுக்கெல்லாம் ரிவிட் அடிக்கிற சப்பாத்தி கள்ளி ஆணியைப்போட்டு ஏண்டா பஞ்சர் ஆக்குகிறாய் அப்படி செய்து சம்பாதிச்சு குடிக்கனுமா என்று சப்தம் போட்டதாகவும், அதற்கு கோவிந்தராஜ் நீ மட்டும் யோக்கியமா? டிக்கெட் கம்மியா எடுத்து தர்றேன்னு சொல்லி புரோக்கர் வேலை செய்துதான் சம்பாதிக்கிறாய் என்று சொன்னதால் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு

சண்டைபோட்டார்கள் என்றும், ஆஜர் எதிரி கோவிந்தராஜை கையால் அடித்து கீழே தள்ளிவிட்டான் கோவிந்தராஜ் போதையில் இருந்ததால் அதைப் பார்த்துவிட்டு நாங்கள் பேசாமல் இருந்துவிட்டோம் என்றும், மறுநாள் 08.04.2019 அன்று கடைக்கு வந்தபோது கோவிந்தராஜ் இறந்துவிட்டதாக தெரியவந்தது என்றும் போலீசார் விசாரணையில் சொல்லி விட்டு, தற்சமயம் ஆஜர் எதிரிக்கு பயந்து இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என வழக்கறிஞர் தெரிவித்தார்.

ஒப்பம் - செல்வம்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,

முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
SESSIONS CASE No. 514/2019
Prosecution Witness PW 3
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. சேக் அப்துல்லா | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் **- 18.09.2024.**

எதிரி ஆஜர்.

முதல்விசாரணை-

நான் தற்போது வெளிநாட்டில் இருந்துவந்துள்ளேன். கடந்த 2018, 2019 ஆண்டுகளில் நான் கல்லூரியில் படித்து வந்த சமயத்தில் மாலையில் பகுதிநேரமாக அ.சா. 2ன் கடையில் மாஸ்டராக வேலை பார்த்து வந்தேன். ஆஜர் எதிரியைத் தெரியாது. இவ்வழக்கில் இறந்துபோன கோவிந்தராஜை தெரியும். அவர் எங்கள் கடைக்கு அருகில் பஞ்சர் கடை வைத்திருந்தார். கோவிந்தராஜ் எவ்வாறு இறந்தார் என்று எனக்குத் தெரியாது. நான் மாலை 05.00, 06.00 மணியளவில்தான் கடைக்கு வேலைக்கு வருவேன். அ.சா. 2 தான் என்னிடம் கோவிந்தராஜ் இறந்துவிட்டதாகச் சொன்னார். நான் கோவிந்தராஜின் பிரேதத்தை பார்க்கவில்லை. இவ்வழக்கு குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் அவ்வாறு விசாரிக்கையில் இச்சம்பவம் குறித்து எதுவும் தெரியாதென கூறினேன். ....

(அரசுத் தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக பாவிக்க அனுமதி கோரியதன்பேரில், சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்கப்படுகிறார்.)

அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை-

நான் போலீசார் விசாரணையில் மதுரை, மாட்டுத்தாவணி பஸ் ஸ்டாண்ட் அருகில் தள்ளுவண்டியில் பாஸ்ட்புட் கடை வைத்து நடத்திவரும் அ.சா.2 அவரின் கடையில் மாஸ்டராக வேலை பார்த்து வந்ததாகவும், அ.சா.2 ன் கடைக்கு அருகில் இவ்வழக்கில் இறந்துபோன கோவிந்தராஜ் இருசக்கர வாகன பழுதுபார்க்கும்கடைவைத்து நடத்தி வந்தாரென்றும், ஆஜர்எதிரி RP Travels ல் புரோக்கராக பணிபுரிந்து வந்தாரென்றும், 07.04.2019 அன்று இரவு சுமார் 11.00 மணியளவில் நானும், அ.சா.2 ம் கடையில் இருந்தபோது ஆஜர்எதிரி இவ்வழக்கில் இறந்துபோன கோவிந்தராஜுடன் ஸ்டாண்டுக்கு வருகிற வண்டிகளுக்கெல்லாம் ரிவிட் அடிக்கிற சப்பாத்தி கள்ளி ஆணியைப்போட்டு ஏண்டா பஞ்சர் ஆக்குகிறாய் அப்படி செய்து சம்பாதிச்சு குடிக்கனுமா என்று சப்தம் போட்டதாகவும், அதற்கு கோவிந்தராஜ் நீ மட்டும் யோக்கியமா? டிக்கெட் கம்மியா எடுத்து தர்றேன்னு சொல்லி புரோக்கர் வேலை செய்துதான் சம்பாதிக்கிறாய் என்று சொன்னதால் இருவருக்கும் வாக்குவாதம்

ஏற்பட்டு சண்டைபோட்டார்கள் என்றும், ஆஜர்எதிரி கோவிந்தராஜை கையால் அடித்து கீழே தள்ளிவிட்டான் , கோவிந்தராஜ் போதையில் இருந்ததால் அதைப் பார்த்துவிட்டு நாங்கள் பேசாமல் இருந்துவிட்டோம் என்றும், மறுநாள் 08.04.2019 அன்று கடைக்கு வந்தபோது கோவிந்தராஜ் இறந்துவிட்டதாக தெரியவந்தது என்றும் போலீசார் விசாரணையில் சொல்லி விட்டு, தற்சமயம் ஆஜர் எதிரிக்கு பயந்து இவ்வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என வழக்கறிஞர் தெரிவித்தார்.

ஒப்பம் -சேக் அப்துல்லா

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,
முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI
SESSIONS CASE No.514/2019
Prosecution Witness PW 4
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.கோதண்டபாணி | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் **- 18.09.2024.**

எதிரி ஆஜர்.

முதல்விசாரணை-

நான் தற்போது மதுரை, கருப்பாயூரணியில் உள்ள பாரதிபுரத்தில் குடியிருந்து எலெக்ட்ரீசியனாக வேலை பார்த்து வருகிறேன். அ.சா. 1 விஜயா என் அண்ணி ஆவார். இவ்வழக்கில் இறந்துபோன கோவிந்தராஜ் என் சகோதரராவார். அவர் மதுரை, மாட்டுத்தாவணி பஸ் ஸ்டாண்டில் இருசக்கர வாகன பழுதுபார்க்கும் கடை வைத்திருந்தார். கடந்த 08.04.2019 அன்று மதியம் சுமார் 02.00 மணியளவில் அ.சா.1 என் அண்ணி எனக்கு போன் செய்து என் அண்ணன் மாட்டுத்தாவணி பஞ்சர் கடை அருகில் இறந்துகிடப்பதாக சொன்னார். அ.சா.1 என் அண்ணி விருதுநகரில் இருந்து பேருந்தில் வந்தவரை மதுரை ரிங் ரோட்டில் பேருந்திலிருந்து இறங்கியவுடன் நாங்கள் இருவரும் சேர்ந்து மாட்டுத்தாவணிக்கு சென்று பார்த்தபோது, மாட்டுத்தாவணி இருசக்கர வாகனம் நிறுத்துமிடம் அருகில் என்

அண்ணன் கோவிந்தராஜ் இறந்துகிடந்தார். பின்பு, நாங்கள் அண்ணாநகர் காவல்நிலையத்திற்கு சென்று என் அண்ணி புகார் கொடுத்தார். நான் அதில் கையெழுத்து செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள சாட்சிக் கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.ஆ. **2** ஆகும். இது குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என வழக்கறிஞர் தெரிவித்தார்.

ஒப்பம் - கோதண்டபாணி.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,

முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.